(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(14).] **பாராளுமன்றம்**

**13 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்**

**2015 ஏப்பிறல் 24 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2015 மே 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4579/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையில் கெசினோ சூதாட்டத்திற்கென 2012 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் உரிமப்பத்திரம் இன்றி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படுவதாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், மேற்படி கெசினோ நிலையங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4801/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடு முழுவதிலும் சேவையாற்றுகின்ற குடும்ப சுகாதார பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) நாடு தழுவிய சேவைக்கு தேவையான குடும்ப சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தாதியர் பணியாட்டொகுதியினருக்கு பேறுகாலப் பயிற்சியை வழங்குவதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) பேறுகால பயிற்சியை வழங்குவது தொடர்பாக தாதியர் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4822/ '14

கௌரவ புத்திக பதிரண,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின், மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடம் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படுகையில் கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) கேள்விப்பத்திரம் கோரப்படவில்லையெனில், அவை வழங்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளதன்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு விண்ணப்படிவத்திலும் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தொகை தனித்தனியாக உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களின் தற்போதைய உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொருவரும் கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களை எவ்வளவு பணத் தொகைக்கு பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் தனித்தனியாகவும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5420/ '14

கௌரவ அஜித் குமார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,—(4)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில், கும்புக்கன் ஓயாவுக்கு குறுக்காக 800 ஏக்கர் அளவான நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக மொனராகலை மாவட்டத்தில், மிளகு மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பாரிய தாக்கம் ஏற்படுமென்பதையும்;

(iii) இதனால் மேற்படி பிரதேச மக்களின் பொருளாதார செயற்பாடுகள் தடைப்படுமென்பதையும்;

(iv) நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக பிரதேசத்தில் பாரியளவில் வனங்களுக்கான சேதமும் சுற்றாடல் சேதமும் நடைபெறுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நீர்த் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி யாது என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5578/ ’14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்காக இருந்த கட்டில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்காக உள்ள கட்டில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையிலான காலத்தினுள் மேற்படி வைத்தியசாலையிலுள்ள கட்டில்களின் எண்ணிக்கை குறைந்திருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ள கொழும்பு நகரத் திட்டத்தினுள் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை உள்ளடங்கியுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5848/ ’14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு, மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், இல. 32 குப்பியாவத்த மேற்கு பிரிவைச் சேர்ந்த, மாளிகாகந்த ஒழுங்கை, 59 மற்றும் 59/8 ஆம் ஆதன வரி இலக்கங்களைக் கொண்டுள்ள இடத்திற்கு அருகிலுள்ள பிரவேசப் பாதையில் அத்துமீறிய நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதால் பிரதேசவாசிகளுக்கு பலவிதமான இடையூறுகள் ஏற்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) கொழும்பு மாநகர சபையின் சில உத்தியோகத்தர்களது அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி சட்டவிரோதமான நிர்மாணிப்பினை அகற்றி குடியிருப்போர்களின் பிரவேசப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5942/ ’15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் செயலாளர்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதி அங்கத்தினர்களின் பெயர், பதவி, முகவரி, மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை அறிவாரா என்பதையும்;

(ii) ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளரினது சேவைக் காலம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

6016/ ' 15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் இறப்பர் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இறப்பருக்கான உத்தரவாத விலையை இறப்பர் உற்பத்தியாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறை யாது என்பதையும்;

(iii) இறப்பருக்கான சந்தை விலைக்கும் உத்தரவாத விலைக்குமிடையிலான வித்தியாசத்தை ஈடுசெய்து கொள்வதற்கு அரசாங்கம் தனியார் நிறுவனமொன்றை தொடர்புபடுத்திக் கொள்கின்றதா என்பதையும்;

(iv) தற்போது புதிய உத்தரவாத விலை முறையியல் அமுல்படுத்தப்படுகின்ற முறை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6023/ ' 15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகில் பல்வேறு நாடுகளிலுமுள்ள இலங்கையர்களுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கணக்குகளின் நிலுவைகள் ஒவ்வொரு நாட்டுக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) குறிப்பிட்ட கணக்கு உரிமையாளர்கள் இலங்கையின் சட்டங்களை மீறுகின்ற வகையில் மேற்படி கணக்குகளில் பணத்தை வைப்பிலிட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறான கணக்குகள் பற்றிய தகவல்கள் யாவை என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட சகல கணக்குகளினதும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு இராஜதந்திர ரீதியாக குறித்த வங்கிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி கணக்குகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(viii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) என்னால் இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சுவிற்சலாந்தின் HSBC வங்கியில் உள்ள கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவுக்கு வழங்கப்பட்ட உங்களது விடையில் நிதியியல் புலனாய்வுப் பிரிவிற்கேற்புடைய சட்டங்கள் தேவைக்கேற்றவாறு திருத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கமைய குறித்த சட்டங்கள் இன்றளவில் திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6033/'15

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் செயலாளர் பதவியில் ஒருவரை மாத்திரமே அமர்த்த முடியும் என்பதையும்;

(ii) மேற்படி செயலாளர் பதவியில் 12 ஆண்டுகள் பணியாற்றிய திருமதி கே.கே.ஜி. பத்மா 2010.08.12ஆம் திகதி முதல் குறித்த பதவியிலிருந்து மாற்றப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) முன்னாள் பணிப்பாளர் நாயகமான திரு. அநூஷ பல்பிட்டவினால், அங்கீகரிக்கப்பட்ட வரையறையினைத் தாண்டி மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் பிரயாண குறிப்புக்களில் கையொப்பமிடுவதை இவர் ஆட்சேபித்தமையே மேற்படி மாற்றலுக்கான காரணம் என்பதையும்;

(iv) இவருக்கு மேற்படி பதவியில் எவ்விதமான கடமையும் ஒப்படைக்காது வேறொருவரை பதில் கடமையாற்றும் செயலாளராக நியமித்து மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த பதவிக்கென நியமிக்கப்பட்ட ஒருவர் காணப்படுகையில், கொடுப்பனவு வழங்கி வேறொருவரை சேவையில் ஈடுபடுத்துவது முற்றாக சட்டத்துக்கு முரணான ஒரு செயலாக அமையாதா என்பதையும்;

(ii) திருமதி கே.கே.ஜீ. பத்மாவை மீண்டும் குறித்த பதவியில் சேவையில் அமர்த்தி, இவர் இழந்த பதவி உயர்வுகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6038/ '15

கௌரவ விக்டர் அன்ரனி,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் மற்றும் புத்தளம் இ.போ.ச. டிப்போக்களில் பணிபுரிந்த டிப்போ முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் எவ்வித குற்றச்சாட்டுமின்றி இப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனரென்பதையும்;

(ii) இப்பதவிகளுக்கு குறைந்தபட்சம் க.பொ.த.(சா.த) பரீட்சைக்குத் தோற்றாத வேறு எவ்வித தகைமைகளுமற்றவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இவ்வாறு தகைமையற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினால் குறித்த நிறுவனங்கள் வீழ்ச்சியடைகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட பதவிகளிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் நியமித்து நல்லாட்சிக்கு முன்மாதிரியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

6040/ ’15

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தின் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணித்தல், கண்டி ஆனந்த வித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தை புனரமைத்தல் மற்றும் மெதகொட, பூஜாபிட்டிய ஜனாதிபதி மாதிரி ஆரம்பப் பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் ஆகிய கருத்திட்டங்களுக்கு கடந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புகள் தற்போது பாதியளவில் பூர்த்தியடைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலைகளிலுள்ள பிள்ளைகளின் நன்மையைக் கருதி மேற்படி கருத்திட்டங்களை மீள ஆரம்பிப்பாரா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4823/ ’14

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கடற்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை கடற்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4837/ ’14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையினால் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மாவட்ட அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலைத் தொழிலாளிகள் மற்றும் ஏனைய பணியாட்தொகுதியினரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவ்வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5579/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுள்ள வெளிநோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2015 மே 19, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4824/ '14

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை தரைப்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் தரைப்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை தரைப்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5580/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவர்கள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பு இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(iii) இது திருத்தியமைக்கப்படவில்லை எனின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5943/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 06/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர், அமைச்சரவை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர், பிரதி அமைச்சர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், கருத்திட்ட அமைச்சர், மாவட்ட மற்றும் இராஜாங்க அமைச்சர், அமைச்சரவை அமைச்சு செயலாளர், மாகாண சபையின் பிரதான செயலாளர், திறைசேரியின் பிரதி செயலாளர் ஆகிய பதவி வகிப்பவர்களின் செயலாளர்களுக்கு ஓய்வூதியத்திற்கான உரிமை உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(அ) (i) மேற்படி ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான அமைச்சரவை நிருபம் மற்றும் மேற்படி ஓய்வூதியம் தொடர்பாக தற்போது செல்லுபடியாகவுள்ள அனைத்து சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பொன்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பாரா,

(ii) தற்போது மேலே குறிப்பிடப்பட்ட ஓய்வூதிய நலன்களை பெறுபவர்களின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6034/ '15

கௌரவ விஜித ஹேரத்,— சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் 2006 – 2011 வரையான காலப்பகுதிக்காக நியமிக்கப்பட்டிருந்த ஹோமியோபதி மருத்துவப் பேரவையானது அரசியலமைப்பின் 12 மற்றும் 14 ஆம் உறுப்புரைகளுக்கு முரணாக 2009.10.29. ஆம் திகதி கலைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக 2006 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட மருத்துவப் பேரவை அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) கலைக்கப்பட்ட மருத்துவப் பேரவைக்குப் பதிலாக அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சட்டபூர்வமற்ற இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை அங்கீகரிக்கின்றாரா;

(ii) மேற்படி இடைக்கால குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 184 தொடக்கம் 275 வரையான மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டதன் ஊடாக ஹோமியோபதி சட்டம் மீறப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நியமனங்களை இரத்துச் செய்வாரா;

(iv) இரத்துச் செய்யும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி சட்டத்தின் 20 வது பிரிவின் கீழ் பதிவாளரொருவரை நியமிக்க மருத்துவப் பேரவையொன்றுக்கு மாத்திரம் உரித்தான தத்துவத்தை மீறி அப்போது நிலவிய சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரால் திரு. எம். ஏ. பெரேரா பதிவாளராக நியமிக்கப்பட்டமை சட்டபூர்வமானதா;

(ii) இன்றேல், மேற்படி நியமனத்தை சரிசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6039/ ’15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 2015 தயட்ட கிருள வேலைத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்துக்கான வீடமைப்பு உதவி வேலைத்திட்டத்திற்கு அமைய எஹலியகொட தேர்தல் தொகுதியின் எஹலியகொட, கிரிஎல்ல மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1000 க்கும் அதிகமானவர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பப் பத்திரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஏற்புடைய பொருட்களை வழங்குவதற்கு விலைமனுக்களை அல்லது கேள்விப் பத்திரங்களை கோரும் பணி இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வீடமைப்பு உதவிகளை எதிர்பார்த்துள்ள குறைந்த வருமானம் பெறுநர்கள் மேற்படி உதவித் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதா என விசாரிக்கின்றனர் என்பதை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அறிவார்களா என்பதையும்;

(ii) இது தொடர்பாக ஏற்புடைய உத்தியோகத்தர்களிடம் விசாரித்து தகவல்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

6041/’15

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி மாதம் நிலவிய விலைக்கு ஒப்பீட்டளவில் தற்போது சாதிக்காவின் விலை 30% - 40% க்கு இடைப்பட்ட அளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சாதிக்காவின் விலை குறைவடைவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) நித்தமும் இடம்பெறுகின்ற சாதிக்காய் விலை வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது இத்தடவை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் சுமார் 50% ஆல் குறைக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளமையின் காரணமாக ஏற்றுமதிக் கமத்தொழிலில் நடைபெறுகின்ற பின்னடைவை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6043/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பொது நிருவாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபைக்காக புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதன் முதற் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி முதற் கட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

6048/ '15

கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தம்பலகாமம் பிரதேச சபையினால் தொல்பொருளியல் இடங்களை பல்வேறு பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தம்பலாகமம் யுனிட் 17 கொலனியில் காணப்பட்ட தொல்பொருளியல் பெறுமதிமிக்க இரண்டு தாதுகோபுரங்களின் சிதைவுகளை அழித்து சிறுவர் பூங்காவொன்று எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு எதிராக சட்டம் ஏன் அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) தம்பலகாமம் - திஸ்ஸபுர கிராமத்தின் நிலவரைபட இலக்கம் திரீ 51 மேலதிக இலக்கம் 16 பத்தி இலக்கம் 16 துண்டு இலக்கம் 576 எனும் தொல்பொருளியல் நிலப் பிரதேசத்துக்கு அருகே அமைந்துள்ள மயானத்தை விஸ்தரிப்பதாகக் கூறிக்கொண்டு, அக்காணியை கம்பி வேலி அமைத்து ஒதுக்கிக்கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எந்த அடிப்படையில் எத்தரப்பினரின் தேவையின் அடிப்படையில் இடம்பெறுகின்றது என்பதையும்;

(iv) பிக்குமார் உள்ளிட்ட பிரதேசவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்த பின்னர் மேற்படி தொல்பொருளியல் காணிகளின் ஊடக வயல்களுக்குச் செல்வதற்கு இருந்த வீதிக்கு தடை ஏற்படுத்தி வேலி நிர்மாணிக்கப்பட்டுள்ளமை எத்தரப்பினரிடமிருந்து பழிவாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில் பௌத்த சிதைவுகளை அழிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடமளிப்பதற்கான காரணம் யாது என்பதையும்;

(ii) அவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விரிவானதொரு விசாரணை யொன்றை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய அல்லது ஊக்குவித்த ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4828/14

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை பொது வைத்தியசாலைக்கு தனது முதலாவது நியமனத்தைப் பெற்ற அதன் தலைமை தாதி உத்தியோகத்தரான திருமதி மல்காந்தி டி சில்வா தற்போது அதே வைத்தியசாலையில் இடமாற்றம் ஏதும் இன்றி 21 வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பதையும்,

(ii) மேற்படி தாதி உத்தியோகத்தர் பல சந்தர்ப்பங்களில் இடமாற்றம் கோரியிருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச தாதிமார் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்குகின்றபோது அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கை யாது;

(ii) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இடமாற்றம் கோரியுள்ள போதிலும்கூட, அரச தாதிமார்களுக்கு இடமாற்றம் வழங்கும் கொள்கை திருமதி மல்காந்தி டி சில்வாவுக்கு செல்லுபடியாகாதிருப்பதற்கான காரணம் யாது;

(iii) குறித்த இடமாற்றம் வழங்கும் கொள்கைக்கமைய இவருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா,

(iv) ஆமெனில், இவருக்கு, இவர் கோருகின்ற இடத்துக்கு இடமாற்றம் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5581/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தற்போதைய ஆயுர்வேத மருத்துவ ஆணையாளரின் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலருக்கு ஆயுர்வேத மருத்துவவியல் தொடர்பாக உள்ள தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவர் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சில் அடைந்துகொள்ள முடியுமான உயர் தொழில்சார் பதவி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5944/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை, கொட்பேயில் அமைந்துள்ள தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்திற்கு சொந்தமான உத்தியோகத்தர் விடுதி இலங்கை கடற்படையின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திருகோணமலை மற்றும் அதனை அண்டிய பிரசேதங்களில் கடமைப் பணிகளை மேற்கொள்ளும்போது தேசிய நீரக வளமூலங்கள் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களின் பாவனைக்காகப் பெறுவதற்கிருந்த மேலே குறிப்பிடப்பட்ட விடுதியை சிவில் நிருவாகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் கடற்படையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கான தேவையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விடுதி நாரா நிறுவனத்தினால் மீள சுவீகரிக்கப்படாதா என்பதையும்;

(iii) இவ்வாறு சுவீகரிக்கப்படுமெனில் அத்தேதி யாதென்பதையும்;

(iv) மேற்படி விடுதியை நாரா நிறுவனம் மீள சுவீகரிக்கும் வரை நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களும், உத்தியோகத்தர்களும் அப்பிரதேசத்தில் கடமை புரியும் போது தங்குமிட வசதியை வழங்குவது எவ்வாறென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6042/ '15

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் இளைஞர் படையணி மற்றும் தொழில் வழிகாட்டல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக கடந்த வருடம் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பாதியளவு நிறைவடைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்போதைய அரசினால் மேற்படி கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினரான பிள்ளைகளின் நலன்கருதி மேலே குறிப்பிட்ட கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6045/'15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படும் வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் திருத்தியமைக்கப்படவுள்ள வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குறித்த வீதிகளை திருத்தியமைப்பதற்குரிய கருத்திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சரவை நிருபங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4829/ '14

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தில், கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், கரகொட உயன்கொட I அத மற்றும் II அத உள்ளிட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமது குடும்பங்களின் பயிர்ச்செய்கை விளைச்சலுக்கு குரங்குகள் மற்றும் மயில்களினால் நேரிடுகின்ற சேதத்தை தடுப்பதற்கு முடியாமல் உள்ளதால் பிரதேச மக்கள் கடும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்களை தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) இதற்காக எதிர்காலத்தில் கடைப்பிடிக்கவுள்ள முறையியல்கள் யாவை;

(iii) மேற்படி பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5945/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. யூ. அநுர எஸ். வீரரத்ன (இலங்கைத் திட்டமிடல் சேவையின் I) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) பின்னர் குறித்த திணைக்களத்தின் பணிப்பாளரின் (நிருவாகம்) DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்படி நியமனம் மீண்டும் திருத்தப்பட்டு இவர் அத்திணைக்களத்தின் தலைமையகத்தில், பணிப்பாளர் (சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள்) எனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. வீரரத்னவுக்கு மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவியைப் பெற்றுக்கொடுக்காதிருப்பதற்கு திருகோணமலை மாவட்ட செயலாளரினதும் சமுர்த்தி விடயத்துடன் தொடர்புபடாத அமைச்சர் ஒருவரினதும் அரசியல் தலையீடு நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய தலையீடு நடைபெற்றிருப்பின், அதனை அங்கீகரிக்கின்றாரா என்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்டத்தினுள் சமுர்த்தி விடயத்திற்குரிய நடவடிக்கைகள் காணி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு திரு. யூ. அநுர எஸ். வீரரத்னவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 மே 20, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4996/ '14

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாடு நடைபெற்ற காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபை எல்லையிலிருந்து அகற்றப்பட்ட நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நாய்கள் கொண்டுசெல்லப்பட்டு விடப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) குறித்த இடத்தில் நாய்களுக்கு உரிய முறையில் வாழ்விடங்களும் உணவும் வழங்கப்பட்டதா என்பதையும்;

(iv) இதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டவாறு நாய்களை கொண்டுசென்று விட்டமை தொடர்பாக விலங்குகள் பற்றிய அமைப்புகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்பாடுகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறு உடன்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விலங்குகள் பற்றிய அமைப்புக்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்பாடுகளில் நிறைவேற்றப்பட்ட மற்றும் நிறைவேற்றப்படாத உடன்பாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே கூறப்பட்டவாறு கொண்டுசென்று விடப்பட்ட நாய்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதேசம் யாதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் குறிப்பிட்ட நாய்கள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும்

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5575/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது அமுலிலுள்ள ஆயுர்வேத சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இது இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை இச்சட்டம் திருத்தப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள், மருத்துவ உத்தியோகத்தர் என்ற பெயரிலா இன்றேல் மருத்துவ நிபுணர்கள் என்ற பெயரிலா அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களை இப்பெயரில் அழைப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5906/ ’15

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகளின் உழைப்பைப் பெற்றுக் கொள்கின்றபோது அவர்களுக்கு வேதனம் வழங்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அந்த வேதனம் எவ்வளவு;

(iii) அந்த வேதனம் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட திகதி யாது;

(iv) இன்றைய நிலைமைகளுக்கு அமைவாக அந்த வேதனம் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளதென்பதை அறிவாரா;

(v) பிரித்தானியா போன்ற நாடுகளில் சிறைக்கைதிகளுக்கு மாதமொன்றுக்கு 200 பவுண்கள் வழங்கப்படுகின்ற சூழ்நிலையில் இந்நாட்டுச் சிறைக்கைதி களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற வேதனத்தில் அதிகரிக்கப்படும் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5913/ ’15

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு உள்ளிட்ட அப்போதிருந்த பல அமைச்சுக்களை இரத்துச்செய்து அந்த அமைச்சுகளில் பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆகவே, அவ்வாறான ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தற்போது எவ்வித கடமைப்பணிகளும் இல்லாதிருக்கின்றார்கள் என்பதையும்;

(iii) இவர்களுக்கு அலுவலகங்களை பேணிவருவதற்கு அரசினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் தற்போது இரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் விளைவாக குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டிடங்களிலிருந்து வெளியேறவேண்டி நேரிட்டுள்ளதென்பதையும்;

(v) இதன் விளைவாக மேற்படி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச ஆதனங்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளில் தற்போது பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளையும் முறைசார்ந்த விதத்தில் அரச சேவைக்கு உள்ளீர்த்து பதவியுயர்வு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதாக 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கேற்ப அவ்வுத்தியோகத்தர்களை 100 நாட்களுக்குள் பயனுறுதிமிக்க பணியில் ஈடுபடுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5916/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.08ஆம் திகதி இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக பொலிஸ் அல்லது ஏனைய பாதுகாப்பு பிரிவுகளினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள், இந்து சமயத் தலங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு சோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த சமயத் தலத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட திகதி மற்றும் அதற்கு ஏதுவான காரணங்கள் ஆகியன கத்தோலிக்க, இந்து மற்றும் முஸ்லிம் சமயத் தலங்களுக்கு அமைய வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6018/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இரகசியமான தடுப்பு முகாம்கள் உள்ளனவா;

(ii) ஆமெனில், அந்த முகாம்கள் பற்றிய விபரங்கள் யாவை;

(iii) அந்த முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் யாவர்;

(iv) அவர்கள் பற்றிய தகவல்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6036/ '15

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி திருமதி தமாரா குணநாயகம் அவர்கள் 1989 முதல் 1990 வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக இருந்துள்ளார் என்று "சுவர்ணவாஹினி" க்கு அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் கூறியுள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், என்ன சான்றின் அடிப்படையில் குறித்த கூற்று வெளியிடப்பட்டது என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட சான்று முக்கியமான சாட்சியாகக் கருதப்படுமிடத்து திருமதி குணநாயகம் அவர்களை நாடு கடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியிலும் அதை அண்மித்த காலப்பகுதியிலும் திருமதி குணநாயகம் அவர்கள் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக இருந்ததுடன் அப்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தொடர்புபட்டிருந்த "அன்னையர் முன்னனியின்" செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் இருந்தார் என்பதையும் அவர் அறிவாரா?

(இ) திருமதி குணநாயகம் அவர்கள் பயங்கரவாதத்திற்கு அனுதாபம் காட்டுகிறார் என குற்றஞ்சாட்டுவது, அவர் மனித உரிமைகள் தொடர்பான துறையில் செயற்பாட்டாளராக இருந்ததன் காரணத்தினாலா என்பதை அவர் மேலும் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4998/ '14

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றதன் பின்னர் மீண்டும் 2012 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது என்பதையும்;

(ii) ஆதலால், பரீட்சைக்கு தோற்றக்கூடிய உச்ச வயதெல்லையான 28 வயது வரையறை பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த ஒரு குழுவினர் உள்ளனர் என்பதையும்,

(iii) கூடியபட்சம் இரண்டு முறை தோற்றக்கூடிய பரீட்சைக்கு வயதெல்லை தொடர்பான பிரச்சினை காரணமாக சிலர் ஒரு தடவை மாத்திரம் தோற்றியுள்ளதுடன், சிலருக்கு ஒரு தடவைகூட தோற்றமுடியவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள தகுதிகளைப் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2014.02.28 ஆந் திகதியளவில் அரச துறை நிறுவனங்களில் நிலவிய இலங்கை கணக்காளர் சேவையின் IIIஆம் தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைவதற்கான உரிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது,

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5576/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக விண்ணப்பித்திருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011.12.31 ஆம் திகதியாகின்றபோது தொழில்வாய்ப்பற்றிருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் இவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5756/ '14

கௌரவ புத்திக பதிரண,— உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின், சம்மாந்துறை பீடத்தின் பீடப்பேரவை கூட்டத்தின் போது சிங்கள மொழியில் கருத்து தெரிவிக்க வேண்டாமென பீடாதிபதி கூறியுள்ளாரென்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் மொழி உரிமை இழக்கச்செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி கட்டளையானது இனவாதத்தை விதைப்பதாயிருக்குமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிங்கள மாணவர்களின் மொழி உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

(iii) மேற்படி பீடாதிபதியின் (அ) (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைக்கு எதிராக அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?